# துவரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி

அரும்பாக்கம், சென்னை – 600 106

## தமிழ் இலக்கியத்துறை

**2022–2023 கல்வியாண்டின் ஆண்டறிக்கை**

**புத்தாக்கப் பயிற்சி (16 ஆகஸ்டு 2022 – 24 ஆகஸ்டு 2022)**

16.08.2022-24.08.2022 வரை தமிழ் இலக்கியத்துறையில் புதிதாகச் சேர்ந்த முதலாமாண்டு மாணவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பெற்றது.

**செந்தமிழ்க்கூடல் – 1 (14 செப்டம்பர் 2022)**

இளங்கலைத்தமிழ் மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணாரும் வகையில் செந்தமிழ்க்கூடல் என்னும் மாதாந்திர இலக்கிய விழாவின் முதல் நிகழ்வு 14.09.2022 அன்று நடைபெற்றது. இதில் மருத்துவர் செ.சங்கர் “இன்றைய சூழலில் உடலோம்பலில் ஆயுஷ் மருந்துகளுக்கு மருந்து கண்காணிப்பின் அவசியம்” எனும் தலைப்பில் உரையாற்றினார்.

**செந்தமிழ்க்கூடல் – 2 (10 அக்டோபர் 2022)**

10.10.2022 அன்று இரண்டாம் செந்தமிழ்க்கூடல் கூடல் நிகழ்வு நடைபெற்றது. மாணவர்களுக்கு மனநலம் காத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மனநல ஆலோசகர் திருமதி. ஆனந்தி கார்த்திக் அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்து “இளைய பாரதம்” என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**செந்தமிழ்க்கூடல் – 3 (09 பிப்ரவரி 2023)**

09.02.2023 அன்று மூன்றாம் செந்தமிழ்க்கூடல் கூடல் நடைபெற்றது. எழுத்தாளரும் நாடகவியலாளருமான திரு. வெளி ரங்கராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்து “அரங்கம் ஒரு கற்றல் முறையாக” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

**செந்தமிழ்க்கூடல் – 4 (15 மார்ச் 2023)**

15.03.2023 அன்று நான்காம் செந்தமிழ்க் கூடல் நடைபெற்றது. இந்நிகழ்வில் முனைவர் ஜா.திரிபுரசூடாமணி அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று “சங்க இலக்கியங்களில் வாழ்வியல்” என்னும் பொருண்மையில் உரையாற்றினார்.

**செந்தமிழ்க்கூடல் – 5 (03 ஏப்ரல் 2023)**

03.04.2023 அன்று ஐந்தாம் செந்தமிழ்க்கூடல் நடைபெற்றது. இதில் முனைவர் ஞா.செல்வகணபதி அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்து “தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்களின் பங்களிப்புகள்” எனும் தலைப்பில் உரையாற்றினார்.

**மதிப்புக் கூட்டுக் கல்வி (02 ஜனவரி 2023 – 31 ஜனவரி 2023)**

02.01.2023 முதல் 31.01.2023 வரை தமிழ் இலக்கியத்துறையில் பயிலும் மூன்றாண்டு மாணவர்களும் பயன்பெறும் வகையில் மதிப்புக் கூட்டுக் கல்வி ’கணினி வரைகலை’ தொடர்பான பாடம் நடத்தப்பெற்றது.

**பயிலரங்கம் (20 பிப்ரவரி 2023 - 24 பிப்ரவரி 2023)**

தமிழ் இலக்கியத்துறை மாணவர்களின் பன்முக ஆற்றல்களை வளர்க்கும் நோக்கில் 20.02.2023 முதல் 24.02.2023 வரை ஐந்து நாட்கள் “தமிழர் மரபும் தற்கால ஊடகங்களும்: திறன் மேம்பாடு & வேலைவாய்ப்பு” என்னும் பொருண்மையில் பயிலரங்கம் நடைபெற்றது. இதில் பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள் கருத்துரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**ஆளுமைத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி (27 மார்ச் 2023 – 01 மார்ச் 2023)**

27.02.2023,28.02.2023,01.03.2023 ஆகிய மூன்று நாட்கள் இளங்கலைத்தமிழ் மாணவர்களின் ஆளுமைத் திறனை மேம்படுத்தும் வகையில் ஆளுமைத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்வின் பயிற்றுநராக திரு. விமல் தியாகராஜன் பங்கேற்று மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

**சிறப்புச் சொற்பொழிவு (13 மார்ச் 2023)**

13.03.2023 அன்று சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. திரு. சீ. ஹரிபாலா சிரஞ்சீவி அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினர். மத்திய, மாநில அரசு சார்ந்து நடைபெறும் போட்டித் தேர்வுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து எடுத்துரைத்து, மாணவர்கள் கேட்ட வினாக்களுக்கு விடையளித்தார்.

**முன்னாள் மாணவர்கள் கூட்டம் (18 மார்ச் 2023)**

18.03.2023 அன்று முன்னாள் மாணவர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் இலக்கியம் கற்று பல்வேறு துறைகளில் பணிவாய்ப்புகளைப் பெற்றவர்களும், உயர்நிலைக் கல்வி கற்கும் மாணவர்களும் பங்கேற்றனர்.